## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1983 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, சடலாண்மை நியாயாதிக்கச் சட்டம்

---

*[1983, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1983, ஒத்தோபர் மாதம் 14 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* — **தபாற் செலவு : சதம் [illegible]**

# 1983 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடலாண்மை நியாயாதிக்கச் சட்டம்

[1983, ஒத்தோபர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஓ. 46/78
1126

**கடலாண்மை நியாயாதிக்கம் பற்றிய சட்டத்தையும், கப்பல்களோடும், கப்பல்களையும் ஏனைய ஆதனங்களையும் கைப்பற்றுதலோடும் சம்பந்தப் பட்ட சட்ட நடவடிக்கைகள் பற்றிய சட்டத்தையும் திருத்துவதற்கும் தொகுப்பதற்கும், அவற்றுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இந்தச் சட்டம் 1983 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, கடலாண்மை நியாயாதிக்கச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது, கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று (இந்தத் தேதி இதனகத்துப் பின்னர் " நியமித்த தேதி " எனக் குறிப்பீடு செய்யப்படும்) நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தினது கடலாண்மை நியாயாதிக்கம்.**

2. (1) வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இலங்கைக் குடியரசின் மேல் நீதிமன்றத்தினது கடலாண்மை நியாயாதிக்கம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்; அதாவது பின்வரும் பிரச்சினைகளுள் அல்லது உரிமைக் கோரிக்கைகளுக்குள் எவற்றையும் விசாரித்துத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கம் :—

(அ) கப்பலொன்றின் உடைமைக்கான அல்லது சொத்தாண்மைக்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை அல்லது கப்பலிலுள்ள ஏதேனும் பங்கின் சொத்தாண்மைக்கான உரிமைக் கோரிக்கை ;

(ஆ) கப்பலொன்றின் கூட்டுச் சொந்தக்காரர்களிடையே அக்கப்பலின் உடைமை பற்றி, அக்கப்பலை ஈடுபடுத்துதல் பற்றி அல்லது அதிலிருந்து பெறப்படும் வருமானங்கள் பற்றி எழும் ஏதேனும் பிரச்சினை ;

(இ) கப்பலொன்றின் அல்லது அதிலுள்ள ஏதேனும் பங்கின் ஈடொன்று தொடர்பிலான, அல்லது கப்பலொன்றின் மீதான அல்லது அதிலுள்ள ஏதேனும் பங்கின் மீதான பொறுப்புத் தொடர்பிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஈ) கப்பலொன்றினால் உறப்பட்ட சேதத்திற்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கை ;

(உ) கப்பலொன்றினால் ஏற்படுத்தப்பட்ட சேதத்திற்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஊ) பின்வரும் காரணங்களின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச்சேதத்துக்கான அல்லது உடல் ஊறுக்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ; அதாவது—

(i) கப்பலொன்றிலுள்ள அல்லது அதன் அணியத்திலுள்ள அல்லது சாதனத்திலுள்ள ஏதேனும் குறைபாட்டின் விளைவாக ; அல்லது

ச 72047—2,825 (09/83)

(ii) கடலோட்டில் அல்லது கப்பலின் முகாமையில் ஏற்படும், கப்பல்மீது சாமான்களை ஏற்றுவதில், கப்பலில் அவற்றைக் கொண்டுசெல்வதில் அல்லது கப்பலிலிருந்து சாமான்களைப் பறிப்பதில் ஏற்படும், அல்லது கப்பலுக்கு ஆட்களை ஏற்றுவதில், கப்பலில் ஆட்களைக் கொண்டுசெல்வதில் அல்லது கப்பலிலிருந்து ஆட்களை இறக்குவதில் ஏற்படும் ஒரு தீச்செயலாக, அசட்டையாக அல்லது தவறுகையாக இருப்பதும், கப்பற் சொந்தக்காரர்களால் அல்லது கப்பலை வாடகைக்கு எடுப்பவர்களால் அல்லது கப்பலின் உடைமையை அல்லது கப்பலின் கட்டுப்பாட்டைத் தம்வசம் வைத்திருக்கும் ஆட்களினால் அல்லது கப்பலின் தலைவரினால் அல்லது அதன் மாலுமிகளினால் அல்லது எந்த ஆளின் தீச்செயல்களுக்கு, அசட்டைகளுக்கு அல்லது தவறுகைகளுக்குக் கப்பல் சொந்தக்காரர்கள், கப்பலை வாடகைக்கு எடுப்பவர்கள் அல்லது கப்பலின் உடைமையை அல்லது கட்டுப்பாட்டை தம்வசம் வைத்திருக்கின்றவர்கள் பொறுப்புடையவர்களாக இருக்கின்றார்களோ அந்த எவரேனும் ஆளினால் புரியப்பட்டதுமான தீச்செயலின், அசட்டையின் அல்லது தவறுகையின் விளைவாக,

உறப்பட்ட உயிர்ச்சேதத்திற்கான அல்லது உடல் ஊறுக்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(எ) கப்பல் ஒன்றில் கொண்டுசெல்லப்படும் சாமான்களுக்கு ஏற்படும் இழப்பிற்கான அல்லது சேதத்திற்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கை ;

(ஏ) கப்பல் ஒன்றில் சாமான்களைக் கொண்டுசெல்வது பற்றிய அல்லது கப்பலைப் பயன்படுத்துதல் பற்றிய அல்லது கப்பலை வாடகைக்கு எடுத்தல் பற்றிய ஏதேனும் உடன்படிக்கையினின்றும் எழும் ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஐ) அழிவு மீட்பு என்ற வகையிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஒ) கப்பலொன்று தொடர்பில் கட்டியிழுத்தல் என்ற வகையிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஓ) கப்பலொன்று தொடர்பில் மாலுமிக் கட்டணம் என்ற வகையிலான ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ஔ) கப்பலொன்றின் தொழிற்பாட்டுக்கென அல்லது பேணுகைக்கென—

(i) வழங்கப்பட்ட சாமான்கள் அல்லது பொருட்கள் தொடர்பிலான, அல்லது

(ii) ஆற்றப்பட்ட சேவைகள் தொடர்பிலான,

ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(க) கப்பலொன்றினை நிர்மாணித்தல், பழுதுபார்த்தல் அல்லது கப்பலுக்குத் தளபாடமிடுதல் தொடர்பிலான அல்லது கப்பற்றுறை இறுப்பனவுகள், கப்பற்றுறை போமதிகள் தொடர்பிலான ஏதேனும் உரிமைக் கோரிக்கை ;

(ஞ) கப்பலொன்றின் தலைவரினால் அல்லது மாலுமிகளுள் எவரேனும் ஒருவரினால் செய்யப்படும், கூலிகளுக்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கையும், அத்துடன் அப்போதைக்கு வலுவிலிருக்கும் சட்டத்தின்கீழ் கூலிகளாக அறவிடப்படற்குரிய ஏதேனும் பணத்தை அல்லது ஆதனத்தைப் பெறுவதற்கு, கப்பலொன்றின் தலைவரினால் அல்லது அவர் தொடர்பில் அல்லது மாலுமிகளுள் எவரேனும் ஒருவரினால் அல்லது அவர் தொடர்பில் செய்யப்படும் ஏதேனும் உரிமைக்கோரிக்கையும் ;

(ச) கப்பலுக்காகச் செய்யப்படும் செலவுகள் தொடர்பில் கப்பல் தலைவரினால், கப்பல்படுத்துநரால், கப்பலை வாடகைக்கு எடுப்பவரால் அல்லது கப்பல் முகவரால் செய்யப்படும் ஏதேனும் உரிமைக் கோரிக்கை ;

(ஞ) கருதிய சேதச் செயலாக இருக்கும் அல்லது கருதிய சேதச் செயலெனக் கோரப்படும் ஒரு செயலினின்று எழுகின்ற ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ட) கப்பற் பிணையக்கடன் ஒப்பந்தத்தினின்றும் எழுகின்ற ஏதேனும் உரிமைக்கோரிக்கை ;

(ண) கப்பலொன்றை, அல்லது கப்பலில் கொண்டுசெல்லப்படும் அல்லது கப்பலில் கொண்டுசெல்லப்பட்டிருக்கும் அல்லது கொண்டுசெல்லப்பட முயலப்பட்டிருக்கும் சாமான்களைப் பறிமுதல் செய்வதற்கான அல்லது கழித்தெறிவதற்கான ஏதேனும் உரிமைக் கோரிக்கை, அல்லது கைப்பற்றப்பட்டபின்னர் கப்பலொன்றை அல்லது அதிலுள்ள அத்தகைய எவையேனும் சாமான்களை மீள ஒப்படைப்பதற்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கை, அல்லது கடலில் அல்லது கடல்மீது, கடற்கரையில் அல்லது கடற்கரைமீது அல்லது ஏதேனும் அலைநீரில் அல்லது அலைநீரின்மீது காணப்படும் வெளியெறி சாமான்கள், மிதக்கும் சேதப்பொருட்கள், கடலடியில் காணும் உடைவுப் பொருட்கள், கைவிடப்பட்ட பொருட்கள் ஆகியவற்றுக்கான உரிமைக்கோரிக்கை அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட கடற்கொள்ளைக்காரர்களின் உடைமையில் காணப்படும் ஆதனங்களுக்கான உரிமைக் கோரிக்கை,

அத்துடன், எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினால் உரித்தாக்கப்படக் கூடியதும், கப்பல்களோடு தொடர்புபட்டதுமான வேறேதேனும் நியாயாதிக்கம்.

(2) (அ) சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான அல்லது சுங்கக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் வேறு ஏதேனும் சட்டத்தின் கீழான எவையேனும் நடவடிக்கைகளில் புரியப்பட்ட ஏதேனும் செயலிலிருந்து அல்லது காரியத்திலிருந்து எழும் ஏதேனும் பிரச்சினையை அல்லது உரிமைக் கோரிக்கையை கேட்பதற்கும் தீர்மானிப்பதற்குமான நியாயாதிக்கத்தை மேல் நீதிமன்றத்திற்கு அளிப்பதாக, (1) ஆம் உட்பிரிவிலுள்ளதெதுவும் வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

(ஆ) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறான அத்தகைய ஏதேனும் பிரச்சினையை அல்லது உரிமைக்கோரிக்கையைக் கேட்பதற்கும் தீர்மானிப்பதற்கும் வேறேதேனும் நீதிமன்றத்தின்மேல் அல்லது நியாய

சபையின்மேல் வேறேதேனும் சட்டத்தினால் அளிக்கப்பட்ட ஏதேனும் நியாயாதிக்கத்தினைப் பாதிப்பதாக, 1978 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, நீதித்துறைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவிலுள்ளதெதுவும் அல்லது (1) ஆம் உட்பிரிவிலுள்ளதெதுவும் வாசித்துப் பொருள்கொள்ளப்படுதலாகாது.

(3) ஓராம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழான நீதிமன்றத்தின் நியாயாதிக்கம், கப்பல் பற்றியதாய் இறுத்தவர்களுக்கிடையே நிலுவையாக நிற்பதும், திருத்தி செய்யப்படாதிருப்பதுமான ஏதேனும் கணக்கைத் திருத்தி செய்வதற்கான தத்துவத்தையும், கப்பல் அல்லது அதன் ஏதேனும் பங்கு விற்கப்படவேண்டுமெனப் பணிப்பதற்கான தத்துவத்தையும், அத்துடன் தக்கதென நீதிமன்றம் நினைக்கும் அத்தகைய வேறு கட்டளையை ஆக்குவதற்கான தத்துவத்தையும் உள்ளடக்கும்.

(4) ஓராம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின்கீழான நீதிமன்றத்தின் நியாயாதிக்கம், ஏதேனும் கப்பலிலிருந்து அல்லது கப்பலினால் இலங்கை நீர்ப்பரப்புகளில் ஏதேனும் எண்ணெய் அல்லது தீழ்ப்பாக்கி வெளியேற்றப்படுவதன் காரணமாக, கசிவதன் காரணமாக அல்லது கொட்டப்படுவதன் காரணமாக 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்தின்கீழ் உறப்பட்ட பொறுப்பொன்று தொடர்பிலான ஏதேனும் உரிமைக் கோரிக்கையைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கான நியாயாதிக்கத்தையும் உள்ளடக்கும்.

இவ்வுட்பிரிவில் "தீழ்ப்பாக்கி" என்பது, 1981 ஆம் ஆண்டின் 59 ஆம் இலக்க, கடல் தீழ்ப்புத் தடுப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டுள்ளது.

(5) ஓராம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில் அழிவு மீட்பு என்ற வகையிலான உரிமைக்கோரிக்கைகள் பற்றிய குறிப்பீடு, ஒரு கப்பலில் இருந்து உயிர்களைக் காப்பாற்றுவதற்காக அல்லது சரக்கினை, அணியத்தை அல்லது அழிபாட்டைப் பேணிக் காப்பதற்காக அளிக்கப்பட்ட சேவைகளுக்கான உரிமைக்கோரிக்கைகள் (இவை அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தினால் ஒரு கப்பல் தொடர்பில் செய்யப்படுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டனவாக இருத்தல் வேண்டும்) பற்றிய ஒரு குறிப்பீட்டையும் உள்ளடக்கும்.

(6) ஓராம், இரண்டாம், மூன்றாம், நான்காம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதல் வேண்டும் :—

(அ) எல்லாக் கப்பல்கள் தொடர்பிலும், அதாவது அவை இலங்கையில் உள்ள அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் துறைமுகத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் சரி, அல்லாவிடினும்சரி, அத்துடன் அவற்றின் சொந்தக்காரர்களின் வதிவு அல்லது வாழுரிமை எங்கிருப்பினுஞ்சரி ;

(ஆ) எல்லா உரிமைக்கோரிக்கைகள் தொடர்பிலும், அவை எங்கு எழுந்தவையாயினுஞ் சரி (இவ்வுரிமைக்கோரிக்கைகள் சரக்கின் விடயத்தில் அல்லது அழிபாட்டுப் பொருள் மீட்பின் விடயத்தில், நிலத்தில் காணப்படும் சரக்கு அல்லது அழிபாடு தொடர்பிலான உரிமைக்கோரிக்கைகளையும் உள்ளடக்கும்) ; அத்துடன்

(இ) அவை ஈடுகள், பொறுப்புகள் ஆகியன பற்றியனவாக இருக்கின்ற வரைக்கும், எல்லா ஈடுகளுக்கும் அல்லது பொறுப்புகளுக்கும் ஏற்புடையனவாதல் வேண்டும், அதாவது அவை பதிவு செய்யப்பட்டனவாயினுஞ் சரி, அல்லவாயினுஞ்சரி, அத்துடன் அவை சட்டப்படியானவையாயினுஞ்சரி, ஒப்புரவுப்படியானவையாயினுஞ்சரி இந்த ஈடுகளும், பொறுப்புகளும் வெளிநாட்டுச் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட ஈடுகளையும் பொறுப்புகளையும் உள்ளடக்கும் :

ஆயின், இந்த உட்பிரிவில் உள்ளது எதுவும், 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் எவையேனும் ஏற்பாடுகளின் கீழ் பணத்தை அல்லது ஆதனத்தை அறவிடக்கூடியதாகவிருக்கின்ற விடயங்களுக்குப் பரந்து நீடிப்பதாகக் கருதப்படுதலாகாது.

கடலாண்மை நியாயாதிக்கத்தைப்பிரயோகிக்கும் முறை.

3. (1) நான்காம் பிரிவுக்கமைய, நீதிமன்றத்தின் கடலாண்மை நியாயாதிக்கத்தினுள் வரும் எல்லா விடயங்களிலும் ஆள்சார் வழக்கொன்று அந்த நீதிமன்றத்தில் கொண்டுவரப்படலாம்.

(2) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் அல்லது (இ) என்னும் பந்தியில் அல்லது (ண) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் உரிமைக்கோரிக்கையின் விடயத்தில் அல்லது 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் பிரச்சினையின் விடயத்தில், அந்த உரிமைக் கோரிக்கை அல்லது பிரச்சினை எக்கப்பல் அல்லது எவ்வாதனம் தொடர்பாக எழுந்ததோ அக்கப்பலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக மேல் நீதிமன்றத்தில் பொருள்சார் வழக்கொன்று கொண்டுவரப்படலாம்.

(3) கோரப்படும் தொகைக்காக ஏதேனும் கப்பலில் அல்லது வேறு ஆதனத்தில் கடலியற்சோந்தை அல்லது வேறு பொறுப்பு இருக்கின்ற எந்த விடயத்திலும் அந்தக் கப்பலுக்கெதிராக அல்லது ஆதனத்திற்கெதிராக நீதிமன்றத்தில் பொருள்சார் வழக்கொன்று கொண்டுவரப்படலாம்.

(4) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) முதல் (ட) வரையிலான பந்திகளிற் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் உரிமைக் கோரிக்கையின் விடயத்தில்—

(அ) உரிமைக் கோரிக்கையானது கப்பல் ஒன்று தொடர்பில் எழுகின்ற விடத்து ; அத்துடன்

(ஆ) வழக்கிற்கான காரணம் எழுந்த நேரத்தில் ஆள்சார் வழக்கின் போது அந்த உரிமைக்கோரிக்கையைச் செலுத்துவதற்கு ஆளாகவுள்ளவர் ("இயைபான ஆள்") அந்தக் கப்பலின் சொந்தக்கார

ராக அல்லது கப்பலை வாடகைக்கு எடுப்பவராக அல்லது கப்பலை உடைமை கொண்டிருக்கின்றவராக அல்லது கப்பலின் கட்டுப்பாட்டை வைத்திருக்கின்றவராக இருந்தவிடத்து,

(அந்த உரிமைக்கோரிக்கை அந்தக் கப்பலின்மீது கடலியற்சோந்தை ஒன்றை ஏற்படுத்தினுஞ்சரி அல்லவாயினுஞ்சரி) பொருள்சார் வழக்கொன்று—

(i) அந்த வழக்கைத் தொடுக்கின்ற நேரத்தில் இயைபான ஆள் கப்பலின் கண்ணுள்ள எல்லாப் பங்குகள் தொடர்பிலும் அந்த ஆள் அக்கப்பலின் பயன்நுகர் சொந்தக்காரராக அல்லது உரிமைமாற்றல் வாடகை ஒப்பந்தமொன்றின் கீழ் அதனை வாடகைக்கெடுப்பவராக இருப்பின், அந்தக் கப்பலுக்கெதிராக ; அல்லது

(ii) அந்த வழக்கைத் தொடுக்கின்ற நேரத்தில் இயைபான ஆள் எந்தக் கப்பலின் கண்ணுள்ள எல்லாப் பங்குகள் தொடர்பிலும் பயனுகர் சொந்தக்காரராக இருக்கின்றாரோ அந்த வேறேதேனும் கப்பலுக்கு எதிராக,

நீதிமன்றத்தில் கொண்டுவரப்படலாம்.

(5) நீதிமன்றம் அதன் கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் ஏதேனும் கப்பலை அல்லது வேறு ஆதனத்தை விற்கும்படி கட்டளையிடுகின்றவிடத்து, நீதிமன்றம், அந்த விற்பனையால் வரும் விற்றவரவு யாருக்குரியதென்பது தொடர்பில் எழுகின்ற ஏதேனும் பிரச்சினையை கேட்டுத் தீர்மானிப்பதற்கு நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) ஆளொருவர், ஆள்சார் வழக்கிலான ஓர் உரிமைக்கோரிக்கையின் மீது ஆளாவாரா அல்லாரா என்பதை (4) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகத் தீர்மானிக்கும்போது, அவ்வாள் அவரது வழமையான வதிவிடத்தை அல்லது ஒரு வியாபார இடத்தை இலங்கையினுள் கொண்டிருக்கிறாரென்று ஊகிக்கப்படுதல் வேண்டும்.

(7) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) முதல் (ட) வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டவாறான அத்தகைய ஏதேனும் உரிமைக் கோரிக்கை தொடர்பாக, கப்பலொன்றுக்கு எழுத்தாணை சேர்ப்பிக்கப்பட்டுள்ளவிடத்து அல்லது அந்த உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்கென கொண்டுவரப்பட்ட பொருள்சார் வழக்கொன்றில் அக்கப்பல் கைதுசெய்யப்பட்டுள்ளவிடத்து, வேறு எதற்கும் எழுத்தாணை சேர்ப்பிக்கப்படுதலாகாது அல்லது அந்த உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்குக் கொண்டுவரப்பட்ட அந்தப் பொருள்சார் வழக்கில் அல்லது வேறேதேனும் பொருள்சார் வழக்கில் வேறு கப்பலெதுவும் கைதுசெய்யப்படுதலாகாது ; ஆனால் இவ்வுட்பிரிவிலுள்ளது எதுவும், அத்தகைய ஏதேனும் ஓர் உரிமைக்கோரிக்கை தொடர்பில் ஒன்றுக்கு மேற்பட்ட கப்பல்களை பெயர் குறிக்கும் எழுத்தாணையொன்று வழங்கப்படுதல் அல்லது ஒவ்வொன்றும் வெவ்வேறு கப்பல்களைப் பெயர் குறிக்கும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எழுத்தாணைகள் வழங்கப்படுதலைத் தடுப்பதாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

கப்பல் மோதல் வழக்குகளிலும் ஏனைய வழக்குகளிலும் ஆள்சார் நியாயாதிக்கம்.

4. (1) இந்தப் பிரிவு ஏற்புடையதாகின்ற ஓர் உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்கான ஆள்சார் வழக்கொன்றை—

(அ) எதிராளியானவர் அவரது வழமையான வதிவிடத்தை அல்லது ஒரு வியாபார இடத்தை இலங்கைக்குள் கொண்டிருந்தாலொழிய ; அல்லது

(ஆ) வழக்கிற்கான காரணம் இலங்கையின் ஆள்புல நீர்ப்பரப்புகளினுள் அல்லது இலங்கையின் ஒரு துறைமுகத்தின் எல்லைக்குள் எழுந்தாலொழிய ; அல்லது

(இ) ஒரே நிகழ்ச்சியின் அல்லது ஒரே நிகழ்ச்சித் தொடரின் விளைவாக எழுகின்ற ஒரு வழக்கு அந்த நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்தாலொழிய, அல்லது அந்த நீதிமன்றத்தால் கேட்டுத் தீர்மானிக்கப்பட்டிருந்தாலொழிய,

நீதிமன்றம் ஏற்றுக் கவனித்தலாகாது.

இந்த உட்பிரிவில்—

" விதிப்பனவுகள் " என்பது, வெளிச்சவீட்டுப் போமதிகள், உள்ளூர் வெளிச்சவீட்டுப் போமதிகள் என்பனவும், வெளிச்சவீடுகள், மிதவைகள் அல்லது ஒளிகாட்டிகள் தொடர்பிலான வேறு விதிப்பனவுகளும், மாலுமிக்கட்டணம் தொடர்பிலான விதிப்பனவுகளும் நீங்கலான எவையேனும் விதிப்பனவுகள் எனப் பொருளாகும் ;

" துறைமுகம் " என்பது ஏதேனும் துறைமுகம், கப்பல்துறை, ஆறு கழிமுகம், புகலிடம், துறைமேடை, கால்வாய் அல்லது வேறு இடம் என்று பொருளாகும் ; அதாவது, ஆளொருவர் அல்லது ஆட்கள் குழுவொன்று அப்போதைக்கு வலுவிலிருக்கும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அங்கே வருகின்ற அல்லது அங்கே அளிக்கப்படும் வசதிகளைப் பயன்படுத்துகின்ற கப்பல்கள் தொடர்பில் விதிப்பனவுகளை அறவிடுவதற்குத் தத்துவம் கொண்டிருக்கின்ற வரைக்கும், மேற்படி துறைமுகம், கப்பற்றுறை முதலியன என்று பொருளாகும் ; அத்துடன் " துறைமுக எல்லைகள் " என்பது சம்பந்தப்பட்ட சட்டத்தினால் அல்லது சட்டத்தின் கீழ் அல்லது இயைபான வழக்காறினால் நிர்ணயிக்கப்பட்ட அதன் எல்லைகள் என்று பொருளாகும் ;

" ஆள்புல நீர்ப்பரப்புகள் " என்பது இலங்கை ஆள்புலக் கடற்பரப்பையும் பாரம்பரிய நீர்ப்பரப்பையும் உள்ளடக்கும்.

(2) ஒரே நிகழ்ச்சி தொடர்பில் அல்லது ஒரே நிகழ்ச்சித் தொடர் தொடர்பில் ஒரே எதிராளிக்கெதிராக இலங்கைக்கு வெளியே உள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் வழக்காளியினால் முன்னர் கொணரப்பட்ட எவையேனும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடாத்தப்படாதுவிடப்படும் வரை அல்லது அத்தகைய எவையேனும் நடவடிக்கைகள் வேறுவகையில் ஒரு முடிவுக்கு வரும்வரை, இந்தப் பிரிவு ஏற்புடையதாகின்ற ஓர் உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்கான ஆள்சார் வழக்கொன்றை நீதிமன்றம் ஏற்றுக்கவனித்தலாகாது.

(3) இந்தப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், அவை ஆள்சார் வழக்குகளுக்கு ஏற்புடையனவாகின்ற அதே மாதிரியாக, (வழக்காளி, எதிராளி ஆகியோர் பற்றிய குறிப்பீடுகள், இந்நோக்கத்துக்காக முறையே அந்த எதிர்க் கோரிக்கையில் உள்ள வழக்காளி பற்றிய குறிப்பீடுகளாகவும் அந்த எதிர்க்கோரிக்கையிலுள்ள எதிராளி பற்றிய குறிப்பீடுகளாகவும் வாசிக்கப்படுதல் வேண்டும்) எதிர்க் கோரிக்கைகளுக்கும் (இவ்வெதிர்க் கோரிக்கைகள், ஒரே நிகழ்ச்சியிலிருந்து அல்லது ஒரே நிகழ்ச்சித் தொடரிலிருந்து எழுகின்ற நடவடிக்கைகளிலான எதிர்க் கோரிக்கைகளாக இருத்தலாகாது) ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) இந்தப் பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள், ஏதேனும் வழக்குக்கான அல்லது எதிர்க் கோரிக்கைக்கான எதிராளியானவர், அந்த நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்கு இணங்கியிருப்பின் அல்லது இணங்க உடன்பட்டிருப்பின், அந்த வழக்குக்கு அல்லது எதிர்க் கோரிக்கைக்கு ஏற்புடையனவாதல் ஆகாது.

(5) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) முதல் (இ) வரையிலான பந்திகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுள் எவையும் திருப்தி செய்யப்படுகின்றவிடத்தெல்லாம், இந்தப் பிரிவு ஏற்புடையதாகின்ற ஓர் உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்கான ஆள்சார் வழக்கொன்றை ஏற்றுக்கவனிப்பதற்கு நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

(6) (அ) கப்பல்கள் மோதுவதால் ; அல்லது

(ஆ) இரண்டோ பலவோவாய கப்பல்களுள் ஒன்றோ பலவோவாய கப்பல்களின் விடயத்தில் நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதால் அல்லது நிறைவேற்றத் தவறுவதால் ; அல்லது

(இ) இரண்டோ பலவோவாய கப்பல்களுள் ஒன்றோ பலவோவாய கப்பல்கள் மோதுகை பற்றிய ஒழுங்குவிதிகளுக்கு இணங்கி ஒழுகாமையால்,

எழுகின்ற சேதத்துக்கான, உயிர்ச்சேதத்துக்கான அல்லது உடல் ஊறுக்கான ஏதேனும் உரிமைக்கோரிக்கைக்கு இப்பிரிவு ஏற்புடையதாகும்.

**கூலிகள்.**

5. இந்தச் சட்டத்தில் உள்ளது எதுவும், இலங்கைக் கப்பலொன்றாக இராத ஒரு கப்பலின் தலைவரால் அல்லது மாலுமிகளுள் ஒருவரால் கூலிகளுக்காகக் கொணரப்படும் ஒரு வழக்கை ஏற்றுக்கவனிக்க மறுப்பதற்கு நீதிமன்றத்திற்குள்ள நியாயாதிக்கத்தை மட்டுப்படுத்துவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

**இறைன் கடலோட்டு சமவாயத்தின்கீழ் அடங்கும் விடயங்களில் நியாயாதிக்கம் பிரயோகிக்கப்படுதலாகாது.**

6. இறைன் கடலோட்டு சமவாயத்தின்கீழ் அச்சமவாயத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்படவேண்டிய ஓர் உரிமைக்கோரிக்கையாக அல்லது பிரச்சினையாக பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட ஏதேனும் உரிமைக் கோரிக்கையை அல்லது பிரச்சினையைத் தீர்மானிப்பதற்கு நீதிமன்றத்திற்கு நியாயாதிக்கம் இருத்தலாகாது என்பதுடன், அத்தகைய ஓர் உரிமைக்கோரிக்கையை வலியுறுத்துவதற்கான அத்தகைய ஏதேனும் நீதி

மன்றத்தில் தொடங்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவையும் தன்னிலைக் கப்படுதலும் வேண்டும்.

கப்பல் ஒன்றைக் கைது செய்யும்படி கட்டளை இடுவதற்கு மேல் நீதிமன்றத்துக்குள்ள தத்துவம்.

7. (1) இச்சட்டத்தின்கீழ் பொருள்சார் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளவிடத்தும், அத்துடன் அந்த வழக்கு எந்தக் கலத்துடன் அல்லது ஆதனத்துடன் தொடர்புபட்டுள்ளதோ அந்தக் கலம் அல்லது ஆதனம், வழக்காளியின் உரிமைக்கோரிக்கை திருப்தி செய்யப்படுமுன்னர் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திலிருந்து அகற்றப்படும் என நீதிபதி திருப்திப்படுமிடத்தும், அந்தக் கலத்தை அல்லது ஆதனத்தைக் கைது செய்வதற்கும் தடுத்துவைப்பதற்குமான ஆணைப்பத்திரமொன்றை இச் சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கிணங்க வழங்குதல் அந்த நீதிபதிக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய வழக்கில், எதிராளி அல்லது தோற்றுகையொன்றைப் பதிந்துள்ள எவரேனுமாள்—

(i) அத்தகைய வழக்கில் கோரப்பட்ட தொகையை, அல்லது எந்தக் கலத்தை அல்லது ஆதனத்தை அத்தகைய வழக்கு தொடர்புறுத்துகிறதோ அந்தக் கலத்தின் அல்லது ஆதனத்தின் கணிக்கப்பட்ட பெறுமதிக்குச் சமமான தொகையொன்றை நீதிமன்றத்துக்குச் செலுத்தினால்; அல்லது

(ii) அத்தகைய தொகையைச் செலுத்துவதற்காக, அவ்வழக்கிற்கான வழக்காளியினது திருப்திக்கிசைய, பிணையை, உத்தரவாதத்தை அல்லது வேறு பிணைப்பொறுப்பைச் செலுத்தினால்,

இவ்வுட்பிரிவின்கீழ் ஆணைப்பத்திரமெதுவும் வழங்கப்படுதலாகாது.

(2) முதலாம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்றைப் பின்பற்றி, ஏதேனும் கலம் அல்லது ஆதனம் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவிடத்து, நீதிபதியானவர், அத்தகைய கலம் அல்லது ஆதனம் தொடர்பான வழக்கில் எதிராளியினால், அல்லது தோற்றுகையொன்றைப் பதிந்துள்ளவரான வேறெவரேனும் ஆளினால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, அத்தகைய எதிராளி அல்லது வேறு ஆள்—

(அ) அத்தகைய வழக்கில் கோரப்பட்ட தொகையை அல்லது கைது செய்யப்பட்டுள்ள அல்லது தடுத்துவைக்கப்பட்டுள்ள கலத்தின் அல்லது ஆதனத்தின் கணிக்கப்பட்ட பெறுமதிக்குச் சமமான தொகையொன்றை நீதிமன்றத்துக்குச் செலுத்தினால்; அல்லது

(ஆ) அத்தகைய தொகையைச் செலுத்துவதற்காக, அவ்வழக்கிற்கான வழக்காளியினது திருப்திக்கிசைய, பிணையை, உத்தரவாதத்தை அல்லது வேறு பிணைப்பொறுப்பைச் செலுத்தினால்,

அத்தகைய கலத்தை அல்லது ஆதனத்தை விடுவிக்கக் கட்டளை ஆக்கலாம்.

(3) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஓர் ஆணைப்பத்திரத்தைப் பின்பற்றி கைதுசெய்யப்பட்ட ஏதேனும் ஆதனம் விரைவில் அழுகிப் போகக்கூடியதாக இருக்குமிடத்து, நீதிமன்றமானது, மாசலினால் அதற்கென விண்ணப்பமொன்று செய்யப்பட்டதன்மேல், அந்த வழக்குத் தீர்மானிக்கப்படும்வரை அத்தகைய ஆதனத்தை விற்பனைசெய்யும்படியும் விற்றவாவுகளை நீதிமன்றத்தில் வைப்பிலிடும்படியும் பணிக்கலாம்.

(4) நீதிபதியானவர், வழக்கின் எல்லாச் சூழ்நிலைகளையும் கருத்திற்கொண்டு (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையிடப்பட்ட ஏதேனும் பிணைத்தொகையை, உத்தரவாதத் தொகையை அல்லது வேறு பிணைப்பொறுப்புத் தொகையைக் குறைக்கலாம் அல்லது அதிகரிக்கலாம்.

*செலவுத் தொகைகள் விதிப்பனவுகள் முதலியன.*

8. (1) நீதிமன்றமானது, செலவுத்தொகைகள், விதிப்பனவுகள், செலவுகள், கட்டணங்கள் ஆகியவற்றை வழங்கலாம்.

(2) செலவுத்தொகைகள் வழங்கப்படும்போது, அவை, 11 (3) ஆம் பிரிவின்கீழ் ஏற்புடையனவாக்கப்பட்ட வீதங்களுக்கிணங்க கணிப்பிடப்பட்டவாறு செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும் :

ஆயின் எவ்வாறாயினும், நீதிமன்றம், தக்கதென நினைத்தால், செலவுத்தொகைகளை நிர்ணயிக்கலாம் அல்லது ஏதேனும் விடயத்தின்கீழ் அனுமதிக்கப்படக்கூடிய செலவுத்தொகைகளை வேறுபடுத்தலாம்.

(3) விதிப்பனவுகளும், செலவுகளும், கட்டணங்களும் வழங்கப்படுகின்றவிடத்து, அவை, அப்போதைக்கு வலுவிலிருக்கும் நீதிமன்ற விதிகளினால் விதித்துரைக்கப்பட்ட அளவுத்திட்டங்களுக்கிணங்க, அல்லது அத்தகைய விதி எதுவும் இல்லாதிருக்கின்றவிடத்து, நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகச் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

*மாசல் மற்றும் பிரதி மாசல்.*

9. (1) மேல் நீதிமன்றத்துக்கு, அதன் கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கையில் அதற்கு உதவும் நோக்கத்துக்கெனப் பின்வருவோர் நியமிக்கப்படல் வேண்டும் :—

(அ) மாசல் ஒருவர், இவர் 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழிலின் பணிப்பாளராதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) பிரதிமாசல் ஒருவர், அச்சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழிலின் பிரதிப் பணிப்பாளராதல் வேண்டும்.

(2) மாசலும் பிரதிமாசலும், இச்சட்டத்தினால் அவர்கள்மீது சுமத்தப்பட்ட கடமைகளைப் புரிகையில், கடலாண்மை நியாயாதிக்கத்தினைப் பிரயோகிக்கும் மேல் நீதிமன்றத்தின் நீதிபதியொருவரால் விடுக்கப்படும் அத்தகைய கட்டளைகளுக்கும் பணிப்புகளுக்கும் அமைந்தவர்களாதல் வேண்டும்.

*முத்திரைகள்.*

10. இந்தச் சட்டத்தின்கீழான ஒரு வழக்கில் அல்லது வேறு நடவடிக்கைகளில் கோப்பிடப்பட்ட வழக்குரைகளும், பிரேரணைகளும், ஆவணங்களும், 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, முத்திரைத் தீர்வைச் சட்டத்தில் செய்யப்படக்கூடிய ஏற்பாடுகளுக்கிணங்க முத்திரையிடப்படுதல் வேண்டும்.

பேணல்களும், நிலைமாறு கால ஏற்பாடுகளும்.

11. (1) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் எல்லா விண்ணப்பங்களும், வழக்குகளும், விசாரணைகளும், விளக்கங்களும் அல்லது வேறு நடவடிக்கைகளும், கொழும்பில் கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்க அமரும் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டதாகவிருத்தல் வேண்டும் என்பதோடு இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க இயன்றவரை தொடர்ந்து நடாத்தப்படுதலும் வேண்டும்.

(2) நியமித்த தேதிக்கு முன்னர் வலுவிலிருந்த சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட எல்லா அறிவிப்புகளும், கோரப்பட்ட எல்லாக் கேள்விப் பத்திரங்களும், அளிக்கப்பட்ட எல்லாத் தத்துவங்களும் அதிகாரங்களும், விதித்துரைக்கப்பட்ட எல்லாப் படிவங்களும், செய்யப்பட்ட எல்லாக் கணக்கீடுகளும் கட்டளைகளும் விதிகளும் நியமனங்களும், வழங்கப்பட்ட எல்லா ஆணைகளும் பணிப்புகளும், கொடுக்கப்பட்ட எல்லா அனுமதிப்புகளும் அங்கீகாரங்களும் சம்மதங்களும் இந்தச் சட்டத்தின்கீழ் அல்லது இதன்கீழ் ஆக்கப்பட்ட விதிகளின்கீழ் வெளியிடப்பட்டனவாகவும், அழைக்கப்பட்டனவாகவும், அளிக்கப்பட்டனவாகவும், விதித்துரைக்கப்பட்டனவாகவும், ஆக்கப்பட்டனவாகவும், வழங்கப்பட்டனவாகவும், கொடுக்கப்பட்டனவாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(3) மேல்நீதிமன்றமானது, இச்சட்டத்தின்கீழ் அதன் நியாயாதிக்கத்தைப் பிரயோகிப்பதில் அதன் நடைமுறையையும் நடவடிக்கை முறையையும் ஒழுங்குபடுத்துகின்ற விதிகள், அரசியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் ஆக்கப்படலாம்.

(4) இந்தச் சட்டத்தின் ஏதேனும் ஏற்பாடு அல்லது அதனுல் விளையும் ஏதேனும் நீக்கம், நியமித்த தேதிக்கு முன்னர் எழுகின்ற ஏதேனும் வழக்குக் காரணம் தொடர்பிலான நடவடிக்கைகளைப் பாதித்தலாகாது.

குறித்த சில விடயங்களில் நீதிமன்றமானது இங்கிலாந்தில் கடலாண்மை நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள ஒரு நீதிமன்றத்துக்குள்ள அதே தத்துவங்களைக் கொண்டிருத்தல்.

12. இச்சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தினுல் அல்லது சட்டவாக்கத்தின்கீழ் அல்லது ஏதேனும் விதியினுல் அல்லது விதியின்கீழ் எந்தக் கருமம் தொடர்பில் அல்லது நடவடிக்கை முறைபற்றிய பிரச்சினை தொடர்பில் ஏற்பாடு எதுவும் அல்லது போதிய ஏற்பாடு எதுவும் செய்யப்படாதிருக்கின்றதோ அந்த ஏதேனும் கருமம் அல்லது நடவடிக்கைமுறை பற்றிய பிரச்சினை இச்சட்டத்தின்கீழ் தொடுக்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் எழுகின்றவிடத்து அதுபோன்ற சந்தருப்பங்களில் இங்கிலாந்தில் கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற நீதிமன்றமானது எந்தக் கட்டளைகளையும் பணிப்புகளையும் ஆக்குவதற்கும் விடுப்பதற்கும் தத்துவமுடையதாக இருந்திருக்குமோ அத்தகைய கட்டளைகளையும் பணிப்புகளையும் (அத்தகைய கட்டளைகளும் பணிப்புகளும் இச்சட்டத்தினுல் அல்லது இச்சட்டத்தின்கீழ் அல்லது வேறு ஏதேனும் சட்டவாக்கத்தினுல் அல்லது சட்டவாக்கத்தின்கீழ் அல்லது ஏதேனும் விதியினுல் அல்லது விதியின்கீழ் செய்யப்பட்ட எவையேனும் ஏற்பாடுகளுக்கு முரணுகை அல்லது ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத வரையில்) ஆக்குவதற்கும் விடுப்பதற்கும் நீதிமன்றம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்திலுள்ள குறித்த சில சொல்லமைப்புகளுக்குப் பொருளமைத்துக் கொள்ளல்.

13. இச்சட்டத்துக்கான அட்டவணையின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய ஏதேனும் சொல்லுக்கு அல்லது சொல்லமைப்புக்கு அவ்வட்டவணையின் I ஆம் நிரையில் குறித்துரைக்கப்படுகின்றவாறு 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக்கப்பற்றொழிற் சட்டத்தின் அத்தகைய ஏதேனும் ஏற்பாட்டிலுள்ள குறிப்பீடு ஒவ்வொன்றும், "கடலாண்மை நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்ற நீதிபதி ஒருவர்" என்பதற்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள்கோடல்

14. இந்தச் சட்டத்தில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி—

"மோதல் ஒழுங்குவிதிகள்" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் 186 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள் என்று பொருளாகும்;

"நீதிமன்றம்" என்பது, இலங்கைக் குடியரசின் மேல்நீதிமன்றம் என்று பொருளாகும்;

"சாமான்கள்" என்பது, பொதிகளையும் உள்ளடக்கும்;

"தலைவர்" என்பது, கப்பலொன்று தொடர்பில் பயன்படுத்தப்படும் போது, ஒரு கப்பலின் கட்டுப்பாட்டை அல்லது பொறுப்பை அப்போதைக்குக் கொண்டிருக்கும் எவரேனும் (மாலுமி தவிர்ந்த) ஆள் என்று பொருளாகும்;

"கப்பல்" என்பது, கடலோட்டுக்குப் பயன்படுத்தப்படும் எந்த விவரணத்தினதுமான ஒரு கலத்தையும் உள்ளடக்கும்;

"இறைன் கடலோட்டு சமவாயம்" என்பது, ஆயிரத்து எண்ணூற்றி அறுபத்தெட்டாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் ஏழாம் தேதியதும், பின்னரான ஏதேனும் சமவாயத்தால் மீளாயப்பட்டதுமான சமவாயம் என்று பொருளாகும்.

## அட்டவணை (பிரிவு 13)

| நிரை I | நிரை II |
|---|---|
| 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழிற் சட்டத்தின் ஏற்பாடு. | சொல் அல்லது சொல்லமைப்பு |
| பிரிவு 60 | ... நீதிமன்றம் |
| பிரிவு 62 | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 122 | ... உயர்நீதிமன்றம் அல்லது இலங்கைக் கடலாண்மை நீதிமன்றங்கள் கட்டளைச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழ் கடலாண்மை நியாயாதிக்கமுள்ள ஒரு மாவட்ட நீதிமன்றம் |
| பிரிவு 211(4) | ... உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் |
| பிரிவு 217 (2) | ... உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் |
| பிரிவு 243 | ... குடியேற்றநாட்டுக் கடலாண்மை நீதிமன்றம் |
| பிரிவு 255(2) | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 256 | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 258 | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 260(3)(ஆ) | ... உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் |
| பிரிவு 264 | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 275(1) | ... குடியேற்றநாட்டுக் கடலாண்மை நீதிமன்றம் |
| பிரிவு 279(2) | ... உயர்நீதிமன்றம் |
| பிரிவு 293 (1) | ... உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்தச் சந்தா (உள்நாடு) ரூபா 150; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர் வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.